10

12

அக்டோபர், 1950

199578

35 435

ஸ்ரீ தந்வந்தரயெ நம:

வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 12. | OCTOBER 1950. | No. 10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1950
MADRAS

श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
पत्रिकेश्वराश्रया विभातु वैद्यचंद्रिका॥

ஆசிரியர்: பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
உதவி ஆசிரியர்: பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

பொருளடக்கம்.

		பக்க
1.	பகல் கனவு.	1
2.	அனுபவ வைத்திய முறைகள் (பண்டிட் டி. எம். முனிசாமி நாயுடு, திருப்பத்தூர்.)	3
3	நேத்ரப்ரகாசிகை (G. ஸ்ரீனிவாசய்யங்கார் தஞ்சாவூர்)	5
4.	க்ஷயரோக நிவாரணம் (Kj. E. S. இராமசாமி ஜோதிடர், எரிசினம்பட்டி)	
5.	வைத்யச் செய்திகள்	9
6.	போபதேவ சதகம் (பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.)	33

N. B:- வைத்ய சந்திரிகையின் சந்தாவை இதுவரை அனுப்பாத வர்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.

17. சின்னக்கடைத் தெருவு.

தெப்பக்குளம் P. O திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரிய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

"பகல் கனவு."

சென்னை அரசினர் ... நூலகம் 15956 ... 1.03.008

பகலில் கனவு கண்டால் அதற்கு பலன் கிடையாது என்று சொல்லுவார்கள். சில நாட்கள் முன் நமது தேசத்தில் பல வைத்தியர்கள் தங்களை அரசாங்கத்தார் பதிவு செய்துகொள்ளப் போவதாக கனவு கண்டார்கள். ஆனால் கனவு கண்டகாலம் பகலா இரவா என்று அப்பொழுது திட்டமாக நிர்ணயிக்க முடியவில்லை. சில நாட்கள் முன்தான் அது பலனற்ற பகல் கனவு என்று ஏற்பட்டது. பலர் பலர் பேச்சை நம்பி தங்களை பதிவு செய்துகொள்ள விண்ணப்பங்கள் அனுப்பினார்கள். அரசாங்க கஜானாவில் செலுத்தும் பணத்தை ஒழுங்காக எண்ணி சரி பார்த்துக்கொண்டு மனுக்களையும் வாங்கி வைத்துக்கொண்டு நன்றாக தூங்கிவிட்டது. தீர்க்கமான நித்திரைக்குப்பிறகு பதிவு செய்துகொள்ள இயலாது என்று மனுக்களை திருப்பி அனுப்ப தீர்மானித்துவிட்டதேயொழிய ஏழை வைத்தியர்களின் பணத்தை வாபசு செய்ய மீனமேஷம் பார்க்கிறது. ஏன் இவ்விதம் பல காலம் தூங்கிவிட்டு மனுக்களை திருப்பிவிட்டீர்கள் என்று கேட்டால் நாங்கள் தூங்கினது இரவுகாலமாகக் கருதப்பட்டால் நீங்கள் அனுப்பியது பகலாகத்தானே இருக்கும். ஆகையால் நீங்களும் ஆறு வருஷம் தூங்கினபடியால் உங்கள் பகல் கனவுக்கு பலனில்லை என்று பஞ்சாங்கத்தை பார்த்து தெரிந்துகொள்ளுங்கள் என்று பதில் கூறலாம். பாவம் நமது களங்கமற்ற ஏழை வைத்தியர்கள் இலவுகாத்த கிளிபோல் ஏமாற்றமடைந்தார்கள். ஆனால் இதன் பலன் பொது ஜனங்களை எவ்வளவு பாதிக்கும் என்பது அரசாங்கமோ பொது ஜனங்களோ சற்று யோசித்திருந்தால் நன்றாக இருக்கும். பல காலமாக அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் உயிர் வாழ்ந்து வந்த சுதேச வைத்ய முறையின் உண்மை அனுபவம் பரம்பரைத் தொழில் நடத்திவந்த ஏழை வைத்யர்களிடம்தான் அடக்கலம் புகுந்திருக்கிறது என்பது உலகம் அறிந்த உண்மை. இன்னிலைமையில் அவ்வபூர்வ முறைகளை இழக்காமல் இருக்கத்தக்க உபாயம் நமது பழைய வைத்யர்களை உத்ஸாகப்படுத்துவதுடன் அவர்களுக்கு தகுந்த ஞானத்தை தரும்படியான வழிகளை பின்பற்றுவதேயாகும். 10 அல்லது 15 வருஷ அனுபவத்தின்பேரில் பதிவு செய்துகொள்வது என்பது சிலதுகாலம் கூட இருந்துவிட்டால் என்ன குடி கெட்டுவிடும். வீட்டிலிருந்தே வைத்யராகலாம் என்ற ஹோமியோபதி விளம்பரங்களை கண்குளிர பார்த்து ஆக்ஷேபிக்காமல் இருக்கும் அரசாங்கம் பரம்பரை வைத்யர்களுக்கு தகுந்த பத்திரிகைகளை நடத்தி அவர்களை வீட்டிலிருந்தே தொழில் நடத்த போதுமான அறிவாளிகளாகச் செய்ய சிலது காலம் முயற்சிக்காமல் இவ்விதம் தள்ளும்படி செய்வது நியாயமற்ற முறையேயாகும். சில காலம் முன் 10 வருஷம் அனுபவமுள்ளவர்களுக்கு பதிவு செய்து

வீரச் செந்தூரம்.

சுத்தி செய்த வீரம் தோலா 1, பொடாஸ் ஐயோடைட் தோலா 1, இவைகள் இரண்டையும் கலுவத்தில்போட்டு அரைத்தால் இரண்டும்சேர்ந்து நல்ல சிகப்பு நிறம் உண்டாகும். அதில் இளநீர் ஜலம்விட்டு ¼ மணி நேரம் அரைத்து அப்படியே 2 மணி நேரம் தேரவைத்து, அந்த நீறை வடித்துவிட்டு மருபடியும் இளநீர் ஜலம்விட்டு அரைத்து முன்மாதிரி தேரவைத்து நீரை வடித்துவிடவும் இந்த விதமாக 5-தரம் செய்யவும் கலுவத்தில் செந்தூரமாக இருக்கும், அதனை வெயிலில் உணர்த்தி செந்தூரத்தை எடுத்து பெட்டியில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:— வேளைக்கு அரிசி பிரமானம் பசு வெண்ணெயில் கலந்து காலை மாலை 5 நாள் கொடுக்கவும் வேகமாக வேலை செய்யும் எல்லாவித மேக ரணங்களையும், உடம்பில் கிளம்பும் கிரந்தி ரணங்களையும், லிங்கம் யோனிசம்பந்த ரணங்களை குணப்படுத்தி விடுகின்றது. வாய்பிடிக்காது. பத்தியம் பால் சாதம், இலகு ஆகாரம் எடுத்துக்கொள்ளவும்

க்ஷய காசங்களுக்கு சித்ரகோட் மூலிகை.

இது பத்திரிகை முதலியவைகளில் பிரசாரத்திற்கு வந்திருக்கின்றது. சித்திரகூடம் லக்ஷ்மண பர்வதத்திலுள்ள ஒரு சாது இதனை தயார் செய்து கொடுக்கின்றார். சரத்பூர்மா தினத்தில் மாத்திரம் இதனை கொடுக்கப்படுகின்றது. இதனை அந்த தினத்தில் சாப்பிடுவதற்காக அவ்விடம் வெகுஜனங்கள் வருகின்றார்கள். மருந்து சிலருக்கு நல்ல குணம் செய்திருக்கின்றது. சிலருக்கு குணம் காண்பிக்கவில்லை.

மருந்து விபரம்:— மருதம்பட்டையை நிழலில் உலர்த்தி சூரணம் செய்துகொள்ளவேண்டும். சரத்பூர்ணிமா தினத்தில் பகல் முழுதும் உபவாசமிருந்து, சாயங்காலம் ரோகி சாப்பிடக் கூடிய அளவு பாயசம் தயார்செய்து ஒரு பீங்கான்தட்டில்போட்டு அதனை சந்திர கிரணம் படும்படியாக நிலா வெளிச்சத்தில் இரவெல்லாம் வைக்கவேண்டும். வியாதியஸ்தன்கூட அந்த இரவு தூங்காமல் இருக்கவேண்டும். காலையில் சுமார் 4 மணிக்கு ஷை சூரணத்தில் ஒரு தோலா எடுத்து அந்த பாயசத்தின்மீது தூவி விடவேண்டும். பிறகு அதனை அருணோதயத்தில் எடுத்து எல்லாம் சாப்பிட்டுவிடவேண்டும். அதனை சாப்பிட்டபின்பு 12 மணி வரையில் தூங்காமல் இருக்கவேண்டும். இந்தவிதமாக ஒரு தடவை சாப்பிட்டதினாலேயே ரோகிக்கு வியாதி குணப்பட்டு சுகுணம் உண்டாக்குகின்றது. இப்படி ஒவ்வொரு வருடமும் சாப்பிட்டு வருவது மிகவும் நலன்தரும்.

நேத்ர ப்ரகாசிகை.

(G. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர்.)

குடிகாப்ரகரணம்.

1. ச்யாமள குளிகை.

1. சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், ஓரிதழ்த் தாமரை வேர், சங்கு, கோழிமுட்டை ஓடு, துத்தம், துருசு இவை 7-ம் வகைக்கு 3 நிஷ்கம். இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் 2 சாமம் அரைத்து குடிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். காய்ந்தபிறகு பச்சை வர்ணம் ஏற்படும். இதை எடுத்துப் பத்திரப் படுத்தவும். இந்த குடிகையை ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட எரிச்சல், சிகப்பு, ஜலம் வடித்தல், ஸங்கோசம், பூளை, மாம்ஸவிருத்தி, குகூணம், விரணம், தூமம், சுக்லம், புஷ்பம், அங்குரம் முதலிய ரோகங்கள் நீங்கும்.

2. சங்கு 12 நிஷ்கம், கருடப்பச்சை மணி 8 நிஷ்கம், ஷட்ஸாரம் வகைக்கு 2 நிஷ்கம், இவற்றை எல்லாம் எலுமிச்சம்பழச் சாறு விட்டு 2 சாமம் அரைத்து முன்போல் குடிகைகள் செய்து ஸ்தன்யப்பால் விட்டு உரைத்துக் கண்ணிலிட ஷை ரோகங்கள் நீங்கும். (ஷட்ஸாரம்:- சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், ஓரிதழ்த்தாமரை வேர், வெள்ளைச்சாரணை வேர், வெள்ளைக் காக்கணம் வேர், வெள்ளைக்குன்றி வேர்.)

3. இந்துப்பூ, வேப்பம்பிசின் வகைக்கு ¼ நிஷ்கம். தாமரை கிழங்கு 1 நிஷ்கம், கருடப்பச்சை மணி 2 நிஷ்கம், இவற்றை எல்லாம் ஒன்று சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து குடிகைகள் செய்யவும். ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட துர்மாம்ஸம், படலம், ஸ்ராவம், விருண சுக்லம் தீரும்.

4. ஓரிதழ்த்தாமரை வேர், தூதுவளை வேர், சங்கு, கோழி முட்டை ஓடு, கந்தாச்மகம், தேற்றான்கொட்டை இவை சம எடையாக எடுத்து எலுமிச்சம்பழ சாறுவிட்டு 1 தினம் அரைத்து குடிகைகள் செய்து ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட படலம், பில்லம், ஸங்கோசம், அருண புத்புதம், புஷ்பம், சுக்லம், அதிதூமம் தீரும்.

(गंधाश्मकं என்கிற பதத்திற்கு கந்தகம் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அனுபவமுள்ள பாம்பரை வைத்தி

யர்கள் துருசுதான் உபயோகிக்கிறார்கள். ஆகையால் गंधाश्मक् என்கிற பதம் வரும் இடங்களில் கந்தாச்மகம் என்றே எழுதுகிறேன்.)

5. கடல்நுரை, பச்சைக்கர்ப்பூரம், சங்கு, இந்துப்பு, கோழி முட்டை ஓடு, படிக்காரம், துத்தம், நீலாஞ்சனம், குன்றுமணி, தேற்றாங்கொட்டை சமஎடை, இவை எல்லாவற்றிற்கும் சமம் கந்தாச்மகம், இவற்றை எல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றால் 2சாமம் அரைத்து மாத்திரைகள் செய்து ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட பில்லம், குகூணம், துர்மாம்ஸம், புஷ்பம் முதலிய ரோகங்கள் குணப்படும்.

2. லகுச்யாமள குளிகை

மனிதன் தலை ஓடு சுட்டது சங்க சூர்ணம், வெள்ளைக்கல், ஓரிதழ்த்தாமரை, துத்தம், கந்தாச்மகம், வகைக்கு 3 நிஷ்கம் இவற்றை எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்து குளிகைகள் செய்யவும் ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட சிகப்பும், எலுமிச்சம்பழச் சாற்றில் ஜலஸ்ராவமும், கரிசலாங்கண்ணிச் சாற்றில் விரணமும், ஸௌராஷ்ட்டிரியில் ரக்ததாதுவும், நந்தியாவர்த்த புஷ்ப ரசத்தில் புகைச்சலும், புளிய இலைச்சாற்றில் அரிப்பும், பனைமட்டைச் சாற்றில் பூவும் நீங்கும்.

3. ச்யாமள தாம்பிராதி குளிகை.

1. ஓரிதழ்த்தாமரை வேர், பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர், சங்கு, ஆமை ஓடு, வாசனைப்புல், துத்தம், துருசு, வகைக்கு 1 நிஷ்கம், இந்துப்பு, கருடப்பச்சை மணி, வெள்ளி, வெங்கலம், வகைக்கு ½ நிஷ்கம். தாம்பரம் 3 நிஷ்கம். இவற்றை எல்லாம் பனைமட்டைச் சாற்றில் 1-நாளும், எலுமிச்சம்பழச் சாற்றில் 1 நாளும், ஸ்தன்யப்பாலில் 1 நாளும் அரைத்து குளிகைகள் செய்து, ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட துர்மாம்ஸம், பூ, லோஹிதம், தூமம், ஸங்கோசம், படலம், சீழ், பில்லம், பக்ஷ்மாங்குரம் முதலியவை குணப்படும்.

2 தாமரைக்கிழங்கு, காட்டு வாகை விதை, ஜாதிப்பூ, வெள்ளைக்காக்கணம், துத்தம், கந்தாச்மகம், சங்கு, மனோசிலை, படிக்காரம், கோழி நெஞ்செலும்பு, இந்துப்பு, வெள்ளி, தாம்பரம் வகைக்கு 3 நிஷ்கம், இவற்றை எல்லாம் பனைமட்டை ரசத்தினாலும், எலுமிச்சம்பழ ரசத்தினாலும், ஸ்தன்யப்பாலினாலும் முன் போல் 3 நாள் அரைத்து குளிகைகள் செய்து ஸ்தன்யப்பாலில் உரைத்துக் கண்ணிலிட பக்ஷ்மரோகம், ஜலஸ்ராவம், படலம், மாம்ஸவிருத்தி, லோஹிதம், வலி, ஸங்கோசம், பில்லம், புஷ்பம், தூமம் முதலியவை குணப்படும்.

1950, செப்டம்பர்-மீ தொடர்ச்சி.

க்ஷயரோக நிவாரணம்.

(கவிராஜ் E. S. இராமசாமி ஜோதிடர் R. I. M. P. எரிசினம்பட்டி.)

அப்ரகம் நான்கு விதம்:—

(1) பிநாகம், (2) மண்டூகம், (3) நாகம், (4) வச்சிரகம்.

1. பிநாகம் உலையில் வைத்து ஊத—சிவப்பாகும்.
2. மண்டூகம் ,, —தவளைபோல் குதிக்கும்
3. நாகம் ,, —பாம்பு சீறுவதுபோல் இருக்கும்.
4. வச்சிரகம் ,, —புகைபோற் பறக்கும்.

புகைபோற் பறப்பதுவே இரசம். அப்ரகத்தில் ரசம் எடுக்க வேண்டுமானால் வச்சிரகத்தில்தான் வரும். இதுதான் கூட்டுச் சரக்கால் உருகும்.

இந்த வச்சிரக அப்ரகத்தில் கிருஷ்ணாப்ரகத்தை 10 பலம் எடுத்து சிறு துண்டுகளாக நறுக்கி அத்துடன் 10 பலம் படிகார தூள் கலந்து அரை பாகத்துள் அடங்கக்கூடிய குடுவையில் போட்டு வாய்மூடி சீலைசெய்து, உலர்த்தி 70 வராட்டியில் புடமிடவும். (வராட்டி எடை தோலா சுமார் 10.)

குடுவை நன்றாய் ஆறியபின் வாயகன்ற மண்பாத்திரத்தில் போட்டுத் தண்ணீர்விட்டுக் கரைத்துத் தெளிவு நீர் வடித்து விடவும். இப்படி படிகாரத்துவர் யாவும் போகும் வரையில் சுமார் 10 தடவை பிசைந்து கழுவித் தெளிவு நீரை அப்புறப் படுத்தி அப்ரேகத்தை வெய்யலில் உலர்த்த தங்கச்சாயலாக வழு வழுப்பான தூளாக இருக்கும்.

குறிப்பு:— ஜெய ரசத்தைப் படிகாரச் சுன்னத்தில் சாரணை செய்வதால் படிகாரத்தின் காரமும், துவர்ப்பும் கூடியே இரசத்தை கட்டி பெலப்படுத்துகிறது. ஆதலால் அப்ரேகத்துள் ரேகித் துள்ள இரசம் புடத்தில் ஓடாதிருக்கும்படியாக மேற்கண்ட முறையில் சுத்திசெய்ய படிகார துவர்ப்பால் அப்ரக ரசம் கட்டி எத்தனை புடம் போட்டாலும், ரசம் ஓடாமல் அப்ரகம் செந்தூரிக்கிறது. ரசம் ஓடிவிட்டால் அப்ரக செந்தூரம் வர்ணம் இல்லாமல் போய்விடும். அப்ரக சுத்தி இவ்வாறு செய்யாமல் செய்யும் செந்தூரங்கள் பயன்தராதொழிகின்றன.

" செய்தக்க அல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமையானுங் கெடும் "

இவ்வாறு செய்த அப்ரக செந்தூரம், படிகார சம்பந்த இரசக்கட்டால் விரணத்தை ஆற்றவும், நீரை வற்றச் செய்யவும், நீரழிவிற்குக் காரணமான (பாங்கிரியாஸ்) சம்பந்தமான மூளை அணுவைப் பெறுவதுடன் மூளைக்கே நிரந்தரமான பலமும் தந்து மதுமேகத்தை தடுக்கிறது.

வச்சிரக அப்ரகம் தேவையானபோது கிடைப்பது துர்பலம். ஆதலால் தக்கபடி முயற்சியில் சேகரிக்கவேண்டும். [இவ்வித முயற்சி செய்து ஒருவருடம் சேகரித்து 10 தோலா கிடைத்து செந்தூரம் செய்துள்ளேன். நல்லபடியுள்ளது.]

அப்ரக செந்தூர முறை.

சுத்தி அப்ரகம் பலம் 10. ஆடு தின்னாப்பாளைச் சாறுவிட்டு 4 சாமம் அரைத்து ரூபா அகலம் கனம் வில்லை செய்து உலர்த்தி, ஓட்டிலிட்டு சீலை செய்துலர்த்தி குமரிரசம் பூசி உலர்த்தி 100 வரட்டியால் புடமிடவும். இவ்வாறு அரைத்தரைத்து புடத்திற்கு 10 எரு அதிகமாக்கி ஐந்து புடமிட களுக்கு மாறிவிடும். மேல் சிகைக்காயிலைச் சாற்றில் 4 சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி முன்போல் செய்து 200 எருவில் புடமிடவும். இவ்வாறு முறையே அரைத்து புடத்திற்கு புடம் எரு அதிகப்படுத்தி கடைசி 10 11-வது புடங்கள் கெஜபுடமாகப் போட செந்தூரமாகும். சில வில்லைகள் சிவப்பாக இல்லாமலிருப்பதை எடுத்து மீட்டும் முன் முறையில் ஒரு புடமிட செந்தூரமாகும். நல்லபடி அரைத்து பாட்டிலில் பதனம் செய்யவும்.

இந்த செந்தூரத்தை கடலழிஞ்சிப்பட்டை லேகியத்தில் 15 நாள் கொடுக்க மதுமூத்திரமும், அதுகாரணமான சகல துற்குணமும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். நீரைப் பரிசோதிக்க சர்க்கரை இராது. 48-நாள் சாப்பிட்டுவர நீரழிவின் பயம் நீங்கிவிடும். அதன்மேல் தங்கம் சம்பந்தமான மருந்து சாப்பிடச் செய்தால் தாதுபுஷ்டி பூரணமாக ஏற்பட்டு நீண்ட காலம் ரோகமின்றி இருக்கலாம். (தொடரும்.)

வைத்தியச் செய்திகள்.

தமிழ் நாடு ஆயுர்வேத மகாமண்டலம்,
சேலம் ஜில்லா.

9—9—50. இன்று சங்கத்தலைவர் திரு. **S. A.** சஞ்சீவி அவர்களின் தலைமையில் கூடியது.

சுகாதார மந்திரிகளின் மகாநாட்டில் செய்துள்ள தீர்மானங்களில் சில ஆதரிக்கத்தக்கதாகவும், பல தீர்மானங்கள் தற்போது தொழில் நடத்திவரும் ஆயுர்வேத சித்த வைத்தியர்களை பாதிப்பதாக இருக்கிறதெனவும், எல்லா ஆயுர்வேத டாக்டர்களும் சமஸ்க்ருதம் படித்திருக்கவும் அல்லது படிக்க முடியாத காரியமெனவும்; தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளில் பயிற்சியுள்ளவர்கள் சமஸ்கிருதம் படித்து பிறகு வைத்தியத்திற்கு படிப்பது மிகக் கஷ்டம் என்றும் வேண்டுமானால் சர்க்கார் பொதுப் பரீட்சை அந்த அந்த பிரதேச மொழிகளில் வைத்து சம அந்தஸ்து வழங்க வேண்டுமெனவும், சென்னை இந்திய வைத்திய போர்டில் பதிவு செய்ய அனுப்பிய மனுக்களை நிராகரித்து சட்டம் செய்திருப்பதற்கு வருந்தத்தக்கதெனவும், இதர மாகாணங்களில் பதிவு செய்தவர்களை Receprocal செய்யவேண்டுமென்றும், இந்திய வைத்திய ஆலோசகர் சர்க்காருக்கு ஆயுர்வேத டாக்டராகதான் இருக்கவேண்டுமெனவும், மேலை நாட்டு வைத்தியம் பயின்றவர்கள் கூடாதெனவும் டாக்டர் சஞ்சீவி பேசினார்.

ஸ்ரீ ஜித் டாண்டன் அவர்கள் ராஷ்டிரபதியாக தேர்ந்தெடுத்தமைக்கு மிக்க மகிழ்ச்சி தெரிவித்து, சகலமும் இந்திய மயமாக இருக்கவேண்டுமென்று கூறிவந்த காங்கிரஸ் ஆட்சியில் இன்று ஆயுர்வேதம் போன்ற சுதேச வைத்தியம் போன்றவைகட்கு கண்துடைப்பு வேலை போன்று தான் நடக்கிறதெனவும், காந்திஜீயின் அடிச்சுவற்றைப் பின்பற்றி எல்லாம் சுதேசி மயமாக இருக்கவேண்டுமென்னும் கருத்தைக்கொண்ட தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ஜித் டாண்டன் அவர்களால் நம் நாட்டு வைத்தியம் ஆதரவுபெற்று புகழ்ச்சியடையுமென்றும், அவர் இதைச் செய்ய தயங்கமாட்டாரெனவும்,

சுகாதார மந்திரி கனம் அம்ருதகௌரி அவர்கள் பல இடங்களில் ஆயுர்வேதத்தை புறக்கணித்து அலோபதிக் வைத்திய முறையை ஆதரித்துப் பேசுவதை பெரிதும் கண்டிக்கத்தக்கதெனவும், காங்கிரஸ் ஆட்சியில் இதுவரை ஆயுர்வேத வைத்தியத்திற்கு அளித்த சலுகை என்ன? அதனால் பயன் பெறாமல் போனது என்ன என்பதையும், அரசாங்க ஆதாவின்மையால் நாட்டு வைத்தியத்தின் பெருமை குன்றிவிட்டதெனவும் ஆதரவு தரப்படுமானால் விஞ்ஞான ஆராய்ச்சியுடன் உலகத்திலேயே ஆயுர்வேத வைத்தியத்தைப்போன்ற மருத்துவம் இல்லையென சொல்லும் நிலைமைக்கு வரும் எனவும், வைத்தியத்தில் உயர்வு தாழ்வு என்ற பாரபட்ச ஆதரவினால்தான் நாட்டு வைத்தியம் சீர்பெறவில்லை யெனவும், 1947-ம் வருடம் சென்னை இந்திய வைத்திய போர்டுக்கு ரிஜிஸ்டருக்கு அனுப்பியவைகளை வாபீஸ் செய்து விடும்படியான கவர்மெண்ட் உத்திரவானது பல வைத்தியர்களுக்கும் ஜீவனத்தொழிலுக்கு இடஞ்சலாவதுடன் இஃது மனிதனது ஜீவாதார உரிமையை பறிப்பதற்கு ஒப்பாகுமெனவும், இதையெல்லாம் கவனித்து அரசாங்கம் இனியாவது ஆயுர்வேதத்திற்கு ஆதரவளிக்கவேண்டுமெனவும் பேசினார்.

சோப்ரா கமிட்டியில் செய்த தீர்மானம் வைத்தியர்களுக்கு குழப்பமாக இருக்கிறதெனவும், சென்னை மாகாணத்தில் முக்கிய பாஷை தமிழ் சித்த வைத்தியம்தான் எனவும், கோடிக்கணக்கானவர்கள் சித்த வைத்தியத்தில் சிகிச்சை பெறுகையில் அதைப்பற்றி சோப்ரா கமிட்டி

சரிவர விசாரிக்காதது வருந்தத்தக்கதெனவும், இனியாவது அதைப்பற்றி சிரத்தை எடுத்து ஆதரவளிக்கவேண்டுமெனவும் சித்த வைத்திய பண்டிட் ஸ்ரீ S. V. இராஜரத்தினக் கண்டர் அவர்கள் பேசியதுடன், டாக்டர் சஞ்சீவியும் அவரும் தாது வைத்தியம், தாது விருத்தி, இந்திரிய பலம் என்பதுபற்றி மிக்க விளக்கங்களுடன் தர்க்கித்தனர்.

ஆயுர்வேத மூல பவுத்திர ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் G. நாராயணசாமி முதலியாரவர்கள் மாணத்திற்கு அனுதாபம் கூறப்பட்டது.

ஆயுர்வேத கண் ஆபரேஷன் வைத்தியர் J. ஈசுப் சாய்பு ஆயுர்வேதத்தில் கண் வைத்தியமும் ஆபரேஷனும் என்பதுபற்றியும் அலோபதிக் வைத்திய முறையைவிட ஆயுர்வேத முறைப்படி ஆபரேஷன் சுலபமும் துன்பமுமில்லாதது என்பதுபற்றி ஆயுத விவரங்களுடன் பேசினர்.

பிறகு காரியதரிசி டாக்டர் பழனியப்பா வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

BHALLA BROTHERS, (Regd.)

Musk, Saffron & Asafoetida (Palkayam) Merchants,

LUDHIANA PUNJAB--INDIA.

சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, பவழம், அம்பர், சிலஜித்து, கோரோசனம், பச்சைக்கற்பூரம், சாலாமிச்ரி, அஷ்டவர்கம், பஸ்மங்கள் இவைகளின் எல்லா ரகங்களும் சேர்க்கை பொருள்களும் யூனனி ஆயுர்வேத வைத்தியங்களுக்கு அவசியமான அளவுக்கு எங்களிடம் கிடைக்கும்.

விலை ஜாபிதாவுக்கும் மற்ற விவரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினல் இனமாக அனுப்பப்படும்.

பல்லா பிரதர்ஸ், (Regd.)

கஸ்தூரி வியாபாரி, லூதியானு. (பஞ்சாப்.)

குறிப்பு:— எல்லா விவரங்களுக்கும் ஆங்கிலத்திலாவது ஹிந்தியிலாவது கடிதம் எழுதவும்.

இரண்டு, கரும்புச்சார் சின்னப்படி ஒன்றே முக்கால், மொதக்கன் கிழங்கு ரசம் சின்னப்படியில் எட்டரை, தித்திரிபக்ஷி மாம்சரஸம் சின்னப்படி இரண்டு, இவைகளைச் சேர்த்து அடுப்பேற்றி எரித்து சர்க்கரை சேர்த்து பிறகு முன்பொடிகளையும், பேரீச்சம் பழ விழுது, சாரப்பருப்பு விழுது இவைகளையும் சேர்த்து லேகிய பதத்தில் இறக்கி தேன் சின்னப்படி அரை சேர்த்து அதில் ஜீரகம், மிளகு வகைக்கு தோலா இரண்டு பொடிசெய்து போட்டு கலந்து வேளைக்கு ஒரு தோலா வரையில் சாப்பிட ஈரல் புண், காஸம், க்ஷயம், வாதரோகம் போம். சுக்ரவிருத்தியுண்டாகும்.

குறிப்பு:— தித்திரிபக்ஷி என்பது சிட்டுக்குருவி. கஷாய முறைப்படி மாமிச துண்டங்களைப்போட்டு கஷாயம் செய்து கொள்ளவும்.

சுலோகம் 33—**லோத்ராதி** குடிகா.

லோத்திப்பட்டை, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல் நெல்லிவற்றல், இந்துப்பு, அதிமதுரம், மயில்துத்தம், ரஸாஞ்ஜனம், தாமரைக்கிழங்கு, வாய்விளங்கம், தாமிரப்பொடி இவைகளைச் சமயெடையாக எடுத்து கல்வத்திலிட்டு மழை ஜலத்தால் அரைத்து மாத்திரையாக உருட்டி வெய்யிலில் காயவைத்து அந்த மாத்திரையை குழந்தைப்பால், செம்மறி ஆட்டின் மூத்திரம், ரசம் புஷ்பச்சார், ஆகிய இவைகளில் ஏதாவதொன்றில் உரைத்து கண்களில் அஞ்சனமிட வெள்ளை விழி, கருவிழி முதலியவையில் வரும் ரோகங்கள் சமிக்கும்.

குறிப்பு:—இந்த குடிகாவின் குணத்தை நாம் அனுபவத்தில் பார்த்ததில்லை இந்த மருந்துக்கு மூல சுலோகம் கையெழுத்து பிரதியில் காணப்படவில்லை உரையைக்கொண்டு இம்மருந்துக்கு மொழிபெயர்ப்பை எழுதியுள்ளோம். இம்மருந்து சக்ரதத்தத்தில் நேத்ர ரோக சிகித்சையில் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு "ஸ்ரீ நாகார்ஜுனவர்தி" என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. பாடலீபுத்ரம் என்ற நகரத்தில் (தற்காலம் பாட்ன என்று அழைக்கப்படும் நகரமே பழைய காலத்தில் பாடலிபுத்ரமென அழைக்கப்பட்டு வந்தது.) ஓர் ஸ்தம்பத்தில் நாகார்ஜுனன் என்பவர் இம்முறையை கல்வெட்டு செய்திருக்கிறார் என சக்ரதத்தர் கூறியுள்ளார். சக்ரதத்தத்தில் மொத்தம் பதினன்கு சரக்குகள் சொல்லப்பட்டுள்ளன. போபதேவரில் பதினென்று காணப்படுகின்றன. சுக்கு. திப்பிலி, மிளகு, இந்த மூன்று சரக்குகள், விடப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த மூன்றையும் இதில் சேர்த்துக்கொண்டு பதினன்கு சரக்குகளையும் சமயெடையாக எடுத்து மழை ஜலத்தால் நன்கு அரைக்கவேண்டும். மயில்

துத்தம், தாமிரப்பொடி, இந்த இரண்டு சரக்குகளையும் பச்சையாக சேர்க்கக்கூடாது. தாமிரத்தை புடம்போட்டு பஸ்மமாகச் செய்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சிவதாஸஸேநர் உரையில் கூறியுள்ளார். மயில் துத்தத்தை சுத்தி செய்யும் விதத்தை அஷ்டாங்கஹ்ருதயத்தில் உத்தரஸ்தானம் பதின்மூன்றுவது அத்யாயத்தில் "நிர்தக்தம் கதிராங்காரை: துத்தம் சேத்தம் நிஷேசிதம் : க்மதஜாபய : ஸர்பி : க்ஷௌத்ரே" என்ற வசனமும். இதே அத்யாயத்தில் முப்பத்துமூன்றுவது சுலோகமும் கூறுகின்றன. இந்த வசனத்தின் பொருள்: இலந்தைக் கட்டை தணலில் மயில்துத்தக்கட்டியைக் காய்ச்சி வரிசையாக வெள்ளாட்டுப்பால், பசு நெய், தேன் ஆகிய இவைகளில் தனித்தனி ஏழுதடவை தோய்த்தால் துத்தம் சுத்தியாகும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட துத்தத்தை மருந்து முறைகளில் சேர்க்க வேண்டும். தாமிர பஸ்ம முறையை நாம் எழுதியுள்ள சித்தர் முறை என்ற நூலில் காணலாம். பதினன்கு சரக்குகள் சேர்ந்த இந்த நாகார்ஜுனவர்திக்கு "சதுர்தசாங்கி" என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதோடு குடிகாதிகாரம் பூர்ணமாயிற்று.

இனி லேஹிய அதிகாரம் ஆரம்பிக்கப்படுகிறது.

சுலோகம் 34—**கூச்மாண்ட** லேகியம்—**ஸூரண** லேகியம்.

சுக்கு, திப்பிலி, மிளகு, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், மல்லிவிதை, ஜீரகம், சிறுநாகப்பூ வகைக்கு தோலா எட்டு, தேன் சின்னப்படி அரை, பூசனிக்காய் தோலா நாநூறு, நெய் சின்னப்படி ஒன்று, சர்க்கரை தோலா நாநூறு, இவற்றுள் சுக்கு முச ஒன்பது சரக்குகளையும் இடித்துப் பொடி செய்துகொ வேண்டும். பழுத்த பூசனிக்காயை மெல்லியதாகத் துரு அதை வேகவைத்து ஜலத்தைப் பிழிந்துவிட்டு அந்த சக்கையைக் கொஞ்சம் வெய்யிலில் உலர்த்திப் பிறகு ஓர் பாத்திரத்தில்போட்டு அடுப்பேற்றி பிறகு அளவுப்படி நெய்விட்டு அதை வதக்கி பிறகு பிழிந்த ஜலத்தை விட்டு சர்க்கரையையும் போட்டு பொடியையும் போட்டு லேகிய பதமாகக் கிளரி இறக்கி தேன்விட்டு கலந்து வேளைக்கு ஒரு தோலா சாப்பிட, காஸம், சுவாஸம், க்ஷதம், ரக்த பித்தம், க்ஷயம், வாந்தி, மூலம், ஜ்வரம் போம். தொண்டை சுத்தமாகும், பலம் உண்டாகும். இவ்விதமே காட்டுக் கருணைக் கிழங்கையும் செய்துகொள்ளவும்.

உரை:—லேகியம் ஆறினபிறகு தேன் விடவேண்டும். தோல் விதை நீக்கிய பூசனிக்காயை துருவி அதை பாத்திரத்தில்போட்டு வேக வைத்து தண்ணீரைப்பிழிந்து அந்தத் தண்ணீரில் சர்க்கரை சேர்த்து பாகு வைக்கவேண்டும். பூசனிக்காயைப்போலவே காட்டுக்கருணைக்கிழங்கையும் செய்து லேகியம் செய்யவேண்டும். மூலநோய் நீங்கும். அக்னி பலம் உண்டாகும்.

குறிப்பு:— இது பிரசித்தமான மருந்து. போபதேவர் சார்ங்கதரர், வாக்படர் ஆக இந்த மூன்று நூல்களிலும் இதே மருந்தில் முறையில் வேறுபாடு காணுகின்றது. பூசணி எடை, சர்க்கரை எடை ஆக இந்த இரண்டும் மூன்று நூல்களிலும் வித்தியாசம் இல்லை. சரக்குகள் மொத்தம் ஆறு என்று வாக்படத்தில் காணுகின்றது. எட்டு என சார்ங்கதரர். ஒன்பது என போபதேவர் கூறுகின்றார். மிளகு, மல்லி விதை சேர்ந்து எட்டு சரக்குகள் சார்ங்கதரத்தில் காணப்படுகின்றது மிளகு மல்லி விதை. சிறுநாகப்பூ மூன்றும் சேர்ந்து ஒன்பது சரக்குகள் போபதேவரில் காணப்படுகின்றது. இந்த சரக்குகள் எடையிலும் வித்தியாசம் காணப்படுகின்றது. அதை அந்த நூல்களில் கவனித்துக் கொள்ளவும். தேன், நெய் இரண்டின் அளவிலும் வித்தியாசம் காணப்படுகினறது. நெய் சின்னப்படி இரண்டு என்றும், தேன் சின்னப்படி ஒன்று எனவும், வாக்படர் கூறுகின்றார். நெய் சின்னப்படி ஒன்று என்றும் தேன் சின்னப்படி அரை என்றும் போபதேவர் கூறுகின்றார் நெய் சின்னப்படி அரையென்றும், தேன் சின்னப்படி கால் என்றும் சார்ங்கதரர் கூறுகின்றார். சார்ங்கதரருக்கும் மற்ற இருவருக்குமுள்ள மற்றொரு முக்கிய பேதத்தை இங்கு கவனிப்பது அவசியம். பூசணிக்காயைத்துருவி அளவுப்படி எடுத்து அதை ஓர் பாத்திரத்தில் போட்டு ஜலம சின்னப்படியில் பனிரெண்டரை விட்டு ஆறே கால்படியாக வற்ற வைத்து கஷாயம் செய்து அதைப்பிழிந்து அந்தத் தண்ணீரில் பாகு வைக்கவேண்டுமென்பது சார்ங்கதரர் …பிப்பிராயம். தண்ணீர் விடாமல் வேகவைத்து வெந்தபிறகு …கப்பிழிந்து அந்த நீரில் பாகு வைக்கவேண்டுமென்பது …பதேவர். வாக்படர் இவர்கள் அபிப்பிராயம். ஆனால் இந்த …கப்படி செய்வதில் சில சமயங்களில் பிழிந்த சார் பாகுவைக்கப் போதுமான அளவு கிடைப்பதில்லை. அந்த சமயங்களில் கொஞ்சம் ஜலம் சேர்த்துக்கொள்ளவேண்டியதாகின்றது. சக்ரதத்தம் ரக்த பித்த சிகித்சையில் இந்த மருந்து "கண்டகூச்மாண்டகம்" என்ற பெயருடன் காணப்படுகின்றது. தேன், நெய், வெல்லம், பூசணி இவைகளின் எடை அஷ்டாங்கஹ்ருதயத்தை ஒத்து இருக்கின்றது. கடைச்சரக்கு எட்டு காணப்படுகின்றது. அவைகளின் எடையில் கொஞ்சம் பேதம் இருக்கின்றது. பூசணியைப் பிழிந்த சார் எடுத்து அதில் பாகு வைக்கவேண்டும் என்பது சக்ரதத்தர் மதம். வேறொரு விதமும் கூறியுள்ளார். அதாவது— பூசணி நாநூறு தோலா எடுத்து அதில் பூசணிச்சார் சின்னப்படி எட்டு விட்டு வேகவைக்க வேண்டும் என்கிறார். வெந்தவுடன் நன்றாகப் பிழிந்து அந்தச் சார் முழுவதையும் எடுத்து அதில் பாகு வைக்கவேண்டுமென்பது பொருள். உரையில் சிவதாஸஸேநர் முதல் மதம்தான் சரியென்றும் அதுவே வைத்யர்கள் வழக்கத்திலுள்ளதெனவும் கூறு

கிறார். வெந்த பூசணித் துண்டத்தை உரலில் போட்டு அரைத்துக்கொண்டு மறுபடியும் சாரைப்பிழிந்துகொண்டு கொஞ்சம் வெய்யிலில் உலர்த்தி பிறகு நெய்விட்டு பொன் நிறமாக வதக்கிக் கொள்ளவேண்டுமென்று சிவதாஸஸேநர் உரை எழுதியுள்ளார். நாம் வழக்கத்தில் இதற்கு பதிலாக தேங்காய் துருவிபோன்ற யந்திரத்தில் பூசணித் துண்டத்தை மெல்லியதாகத் துருவிக் கொள்ளுகிறோம். இதுவும் சுலபமான வழியே. அஷ்டாங்க ஹிருதயப்படி தேனும், நெய்யையும் சேர்ப்பதில் லேகியத்தில் அடங்காமல் மிகுந்து நிற்கின்றது சார்ங்கதரப்படி சேர்த்தால் லேகியத்திற்கு போதுமானதாக இருக்கவில்லை. ஆகவே போப தேவ வசனம் நமக்கு தெரியாத காலத்திலேயே உசிதத்தை அனுபவத்தால் அறிந்து அஷ்டாங்க ஹிருதய அளவில் பாதி தான் வாடிக்கையாகச் சேர்த்து வந்தோம். இப்பொழுது போப தேவருடைய வசனம் நமது வாடிக்கையை அனுசரித்தாகவே கிடைத்துவிட்டது. காட்டுக்கரணைக்கிழங்கையும் இதே அளவுப் படி எடுத்து கூச்மாண்ட லேகியத்திற்குச் சொன்ன சகல விஷயங்களையும் அப்படியே செய்யவேண்டும்.

யோகரத்நாகரம் ரக்தபித்த சிகித்சையில் "கூச்மாண்டாவலேஹம்" என்ற பெயருடன் இதே மருந்து காணப்படுகிறது. சக்ரதத்த முறையை அநுசரித்திருப்பதுடன் சில விசேஷமும் காணப்படுகிறது. அதாவது—பாகு வைக்க அதே எடையில் கல்கண்டை எடுத்துக்கொள்ளவேண்டும். ஜீனி தோலா பதினாறு திராக்ஷைப்பழம் எட்டு தோலா லவங்கம் தோலா நான்(கு) பச்சைக் கற்பூரம் தோலா ஒன்று. இவைகளையும் சேர்(த்துக்) கொள்ளவேண்டுமென்று சிலர் மதமென கூறப்பட்டுள்(ளது.) காட்டுக்கரணைக்கிழங்கையும் கூச்மாண்ட லேகிய அளவுப்(படி) எடுத்து கூச்மாண்ட லேகியத்திற்குச் சொன்ன சகல விஷயங்களையும் அப்படியே செய்யவேண்டும் அதாவது கூச்மாண்ட லேகியத்தில் பூசணியைத்தள்ளி அந்த எடைக்கு காட்டுக்கரணைக் கிழங்கை எடுத்துக்கொள்ளவேண்டும் மற்றவையனைத்தும் ஒரே மாதிரி—இம்முறை சார்ங்கதரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சுலோகம் 35-36—**சங்க** லேகியம்—**ஆர்த்ரக** லேகியம்.

காக்கணட்டான், பில்வ வேர், குமிழம் வேர், தழுதாழைவேர் பாதிரி வேர், பலகப்பிரியாணி வேர், கண்டங்கத்திரி வேர், முள்ளி வேர், ஓரிலை வேர், மூவிலை வேர்' சிறுநெருஞ்சி வேர், சாதா கோஷ்டம், பூலாங்கிழங்கு, சிருகாஞ்சொரி வேர், பூனைக்காலி, குருந்தொட்டி வேர், நாயுருவி வேர். யானைத்திப்பிலி, சீந்தில் கொடி. சுக்கு, மலைதாங்கி வேர், தேசாவரம், கொடுவேலி வேர்ப் பட்டை, சிறுதேக்கு வகைக்கு தோலா எட்டு, கடுக்காய் நூறு யவம் (இ)நூற்றி நாற்பத்தாறு தோலா, இவைகளைச் சேர்த்து

பானையில் போட்டு ஜலம் சின்னப்படி நாற்பது விட்டு கஷாயம் வைத்து வடிகட்டின கஷாயத்தை ஓர் இரும்பு பாத்திரத்திலிட்டு கடுக்காய் நூறையும் போட்டு வெல்லம் தோலா நாநூறு சேர்த்து லேகிய பதம் வரும் சமயத்தில் நல்லெண்ணெ தோலா 16, நெய் தோலா பதினாறு சேர்த்து இறக்கி திப்பிலிப்பொடி தோலா பதினாறு தேன் சின்னப்படி அரை சேர்த்து வேளைக்கு இரண்டு கடுக்காய்களும், ஒரு தோலா லேகியமும் சாப்பிட காஸம் மூலம் கிரஹணீ, க்ஷயம், ஜ்வரம், சுவாஸம், பீனசம், அரோசகம் போம். **ஆர்த்ரகாதி** லேகியம் சொல்லப்படுகின்றது—இஞ்சிரஸம் சின்னப் படி மூன்றேகால், வெல்லம் தோலா இருநூறு, இதைப் பாகு வைத்து அதில் ஓமம், அயச்சிந்தூரம், கோரைக்கிழங்கு, மல்லி விதை, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், ஜீரகம், வகைக்கு தோலா இரண்டு இடித்துப்போட்டு கிளரி வேளைக்கு அரைத் தோலா சாப்பிட பீனசம் வீக்கம் வயிற்றுவலி, காஸம், மூலம், க்ஷயம், குன்மம், ஜ்வரம் ஆகியவை போம்.

குறிப்பு:—இது மிகப் பிரசித்தமான மருந்து இதற்கு "அகஸ்த்ய ஹரீதகீ லேகியம்" என மற்ற எல்லா நூல்களிலும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைச் சரக்குகள் மொத்தம் இருபத்தி நான்கும் நூறு கடுக்காய்களும் யவ தானியமும் சேர்ந்து மொத்தம் கஷாய திரவியங்கள் இருபத்தாறு ஆகின்றன. அஷ்டாங்கஹிருதயத்தில் சிருகாஞ்சொரி, சீந்தில், சுக்கு, மலை தாங்கி ஆக நான்கு சரக்குகள் சொல்லப்படவில்லை சிவதாஸஸேநர் விசேஷம் கூறுகின்றார். அதாவது—கஷாயச் சரக்குகள் (இரு)பத்திநான்கு அளவுப்படி எடுத்து இடித்து நொறுக்கிப் (பா)னையில் போட்டு யவ தானியத்தையும் சேர்த்து அதில் நூறு கடுக்காய்களை ஓர் துணியில் முடிந்து பானையில் போட்டு ஜலம் விட்டு எரித்து நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி கஷாயத்தைப்பத்திரப்படுத்தவும். கடுக்காய்களை தனியாக எடுத்து ஓர் இரும்பு சலாகையால் கடுக்காயின் நடுவில் ஓட்டையிடவேண்டும் பிறகு கடுக்காய்களை ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு முதலில் நல்லெண்ணெ முழுவதையும் விட்டு வதக்கவேண்டும். கடுக்காய்களில் துவாரம் இருப்பதால் எண்ணெ அதன் வழியாக வியாபித்து நன்றாக வதங்க ஹேதுவாகும். பிறகு நெய்யையும் விட்டு அதில் கஷாய ஜலம் சேர்த்து வெல்லத்தையும் சேர்த்து பாகுபதம் வரும்போது இறக்கி திப்பிலிப்பொடியையும் தேனையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். வேளைக்கு ஒரு கடுக்காயும் ஒரு தோலா லேகியமும் சாப்பிடலாம் மலம் போகும் சரீரத்திற்குத் தக்கபடி அளவைக் கூட்டியும் குறைத்தும் கொள்ளலாம் நல்லெண்ணெ, நெய் வகைக்குச் சின்னப்படி அரை சேர்க்கவேண்டுமென அஷ்டாங்கஹிருதயத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது தவிர வேறு பேதமில்லை. நல்ல பெரிய கடுக்காய்களாகப்

பொறுக்கி எடுத்துக்கொள்ளவேண்டும் ஆர்த்ரக லேகியம்— இம்மருந்து யோகரத்நாகரத்தில் காஸ சிகித்ஸையில் காணப்படுகிறது. "வைத்ய ஜீவனம்" என்ற நூலில் இருந்து யோகரத்நாகரத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது மொத்தம் எட்டு சரக்குகளில் அயச்சிந்தூரம் நீங்கலாக மற்றவைகளைப் பொடி செய்துகொண்டு அயச்சிந்தூரத்தையும் சேர்த்து பாகில்போட்டு கிளரி வடகமாகவோ அல்லது மாத்திரைகளாகவோ உருட்டி வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவேண்டும் இதில் தேன், நெய் சேருவதில்லையாகையால் இதை லேஹிய பிரகரணத்தில் சொல்லியிருப்பது பொருந்தாதென நினைக்கிறோம் மோதகப் பிரகரணத்தில் சொல்லுவது மிகப் பொருந்தும் யோகரத்நாகரத்தில் சரக்குகளின் எடையில் பேதம் காணப்படுகிறது. ஓமம் முதலிய எட்டு சரக்குகளை வகைக்கு எட்டு தோலா எடை எடுத்துக்கொள்ளும்படி யோகரத்நாகரம் கூறுகிறது.

சுலோகம் 37—**பார்ங்கியாதி** லேகியம்.

சிறுதேக்கு தோலா நானூறு, தசமூலம் வகைக்கு நாற்பது தோலா, இவைகளை இடித்து நொறுக்கி ஓர் பானையில் போட்டு நூறு கடுக்காய்களை துணியில் கட்டி அதில் போட்டு ஜலம் சின்ன படியில் ஐம்பத்தெட்டுபடி விட்டு அடுப்பேற்றி பதினென்கைப்படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி கஷாயத்தை ஓர் இரும்பு பாத்திரத்தில்விட்டு கடுக்காய்களையும் அதில் போட்டு வெல்லம் நானூறு தோலா சேர்த்துப் பாகுவைத்து அதில் சுக்கு திப்பிலி, மிளகு, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், வகைக்கு தோலா நான்கு, யவக்ஷாரம் தோலா இவைகளைப் பொடிசெய்து போட்டு கிளரி ஆறினபிறகு தேன் தோலா இருபத்திநான்கு சேர்த்து வேளைக்கு ஒரு கடுக்காயும் ஒரு தோலா லேகியமுட சாப்பிட ஆஸ்த்மா குணமாகும். காசம் முதலியன விலகும்.

குறிப்பு:— இது ஆஸ்த்மா நோயில் முக்கியமான மருந்து. சக்ரதத்தத்தில் ஹிக்கா சுவாஸ சிகித்சையில் பார்ங்கீகுடம் என்ற பெயருடன் சொல்லப்பட்டுள்ளது.

சுலோகம் 38—**கம்ஸஹரீதகீ** லேகியம்.

தசமூலம் வகைக்குத் தோலா இருபத்தைந்து எடுத்து இடித்து பானையில் போட்டு ஜலம் சின்னப்படி முப்பத்திரண்டு விட்டு நான்குபடியாக வற்றவைத்து வடிகட்டி அந்த கஷாயத்தை ஓர் இரும்பு பாத்திரத்திலிட்டு நூறு கடுக்காய்களைச் சேர்த்து அடுப்பேற்றி எரித்து வெல்லம் தோலா நானூறு சேர்த்து பாகு பதம் வந்தபிறகு சுக்கு, திப்பிலி, மிளகு, யவக்ஷாரம் வகைக்கு தோலா நான்கு, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், வகைக்கு

தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்துபோட்டுக் கிளரி ஆறின பிறகு தேன் சின்னப்படி ஒன்றுவிட்டு ஒரு கடுக்காயும் ஒரு தோலா லேகியமும் சாப்பிட்டுவர அம்ல பித்தம், அரோசகம், ஜ்வரம், சுவாசம் சரீரம் இளைத்தல், வீக்கம் ஆகிய இவை போம்.

குறிப்பு:— சரகஸம்ஹிதையில் 'கம்ஸஹரீதகீ" என்ற பெயருடனும் மற்ற நூல்களில் "தசமூலஹரீதகீ" என்ற பெயருடனும் கூறப்பட்டுள்ளது ஒரே மருந்தாகும். பிருந்தர் என்பவர் இரண்டும் வேறு மருந்து என்று கூறியிருப்பதை மறுத்து சக்ரதத்தர் சோத சிகித்ஸையில் இந்த இரண்டு மருந்துகளும் ஒன்றெனக் கூறியுள்ளார். யோகரத்நாகரம் சோத சிகித்ஸையில் இந்த இரண்டு மருந்துகளும் ஒன்றென ஜேஜ்ஜடர் கூறியுள்ளதாக விவரித்திருக்கின்றது. இது வீக்க நோயில் விசேஷித்து உபயோகமுள்ளது

சுலோகம் 39 — வாஸாஹரீதகீ லேகியம்.

ஆடாதோடை ரஸம் சின்னப்படி பனிரண்டரை, சர்க்கரை தோலா 400, இதை பாகுவைத்து, கடுக்காய்ப்பொடி தோலா இருநூற்றி ஐம்பத்தாறு, சேர்த்துக் கிளரி அதில் தேன் சின்னப்படி அரை சேர்த்து திப்பிலி தோலா இரண்டு, மூங்கிலுப்பு தோலா பதினாறு, சிறுநாகப்பூ, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், வகைக்கு தோலா ஒன்று, இடித்துப் பொடிசெய்துபோட்டு வேளைக்கு ஒரு தோலாவீதம் சாப்பிட குன்மம் முதலியவை நீங்கும்.

குறிப்பு— இம்மருந்து மிகப்பிரசித்தமானது. யோகரத்நாகரம் ரக்தபித்த சிகித்சையில் காணப்படுகிறது. திப்பிலி தோலா எட்டு என்று யோகரத்நாகரத்தில் கூறப்பட்டுள்ளது மற்றவைகளில் பேதமில்லை. இங்கு ஒன்று கவனிக்கவேண்டும். யோகரத்நாகரத்தில் இம்மருந்துக்கு "வாஸாகண்டம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதே நூலில் கூறிய சிகித்சையில் "வாஸாவலேஹம்" என்ற பெயருடன் ஓர் மருந்து காணப்படுகின்றது. அதில் மூங்கிலுப்பு சேராமல் மற்றவையனைத்தும் இந்த மருந்தையே ஒத்து இருக்கின்றது. சக்ரதத்தத்தில் ரக்தபித்த சிகித்சையில் "வாஸாகண்டம்" என்ற பெயருடன் காணப்படும் மருந்தும் யோகரத்நாகரம் வாஸாவலேகத்தை ஒத்து இருக்கின்றது. ஆடாதோடையைக் கஷாயமிட்டு ரஸம் எடுத்துக்கொள்ளும்படி சக்ரதத்தம் முதலிய நூல்கள் கூறுகின்றது. பச்சையான ஆடாதோடைத்தழை தோலா நானூறு எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படியில் ஐம்பதுபடிவிட்டு நான்கில் ஒன்றாக அதாவது பனிரண்டரைப் படியாக வற்றவைத்துக் கொள்ளும்படி சக்ரதத்தம் கூறுகின்றது

சுலோகம் 40 — ஆமலகாதி லேகியம்,

நெல்லிச்சார், கொடுவேலி கஷாயம், சீந்தில் கஷாயம், தசமூல கஷாயம், வகைக்கு சின்னப்படி ஆறேகால் எடுத்து அதில் வெல்லம் தோலா நாநூறு சேர்த்து அதில் கடுக்காய்ப்பொடி தோலா இருநூற்றிஐம்பத்தாறு, கொடுவேலிவேர்பட்டை, சுக்கு திப்பிலி, மிளகு வகைக்குத்தோலா நான்கு. சிருநாகப்பூ, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், வகைக்குத் தோலா நான்கு, யவக்ஷாரம் தோலா ஒன்று இவைகளைப் பொடி செய்துபோட்டுக் கிளரி ஆறின பிறகு தேன் சின்னப்படி ஒன்று விட்டு கலந்து வேளைக்கு ஒரு தோலா யெடை சாப்பிட குன்மம். ஹிருதயநோய் போம். சோபை போம்.

குறிப்பு:— இம்மருந்தும் (இதே சுலோகமும்) யோகரத்நாகரத்தில் சுவாஸ சிகித்சையில் "பக்த்வா பஞ்ச துலா" என்ற வாக்யத்தால் சொல்லப் பட்டுள்ளது நெல்லிக்காய் கிடைக்காவிட்டால் கஷாயம் போட்டுக் கொள்ளவும். தசமூலம் மொத்தம் சேர்த்து கஷாயம் ஆறேகால் படியாக எடுத்துக் கொள்ளவும். நான்கு கஷாயங்களையும் தனித் தனியாகப் போட்டு எடுத்துக் கொள்ளவேண்டும்.

சுலோகம் 41 — தந்தீசிவாதி லேகியம்.

கடுக்காய் இருபத்தைந்து' தந்திவேர், கொடுவேலிவே வகைக்கு தோலா நூறு இவற்றுள் கடுக்காய் நீங்கலாக இரண்டையும் நொறுக்கி ஓர் பானையில் போட்டு, கடுக்காய் ஓர் துணியில் முடிந்து அதோடு சேர்த்து ஜலம் சின்னப் முப்பத்திரண்டு விட்டு அடுப்பேற்றி சின்னப்படி இரண்டாக வற்றவைத்து வடிகட்டி அந்த கஷாயத்தில் கடுக்காய்களைப் போட்டு அதில் வெல்லம் தோலா நூறு சேர்த்து பாகுவைத்து சிவதைவேர் தோலா பதினாறு, சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கு தோலா இரண்டு, இவைகளைப் பொடிசெய்துபோட்டு நல்லெண்ணை தோலா எட்டு சேர்த்து லேகியமாகக் கிளரி ஆறின பிறகு தேன் தோலா எட்டு சேர்த்து கலந்து வேளைக்கு ஒரு கடுக்காயும் ஒருதோலா லேகியமும் சாப்பிட்டுவர பாண்டு, உதரம் சோபம், ஹிருதய ரோகம், கிரஹணீ, குன்மம், க்ஷயம், மூல நோய், ஜ்வரம் ஆகிய இவை போம்.

சுலோகம் 42 வியாக்ரீபத்யா லேகியம்

கண்டங்கத்திரி வேர் தோலா நானூறு, இடித்து ஓர் பானையில் போட்டு அதில் கடுக்காய் நூறு ஓர் துணியில் முடிந்து போட்டு ஜலம் சின்னப்படி முப்பத்திரண்டு விட்டு அடுப்பேற்றி

எட்டு படியாக வற்றவைத்து அந்த கஷாயத்தில் கடுக்காய்களைப் போட்டு வெல்லம் தோலா நானூறு சேர்த்து சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கு தோலா எட்டு, சிறுநாகப்பூ, கருவாப்பட்டை, பச்சிலை, ஏலம், வகைக்கு தோலா நான்கு, யவக்ஷாரம் தோலா இரண்டு, இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டுக் கிளரி லேகியம் செய்து ஆறவைத்து அதில் தேன் தோலா இருபத்தி நான்கு விட்டு கலந்து வேளைக்கு ஒரு கடுக்காயும், ஒரு தோலா லேகியமும் சாப்பிட காஸம், ஆஸ்த்மா, சோபம், பீநஸம், இவை போம்.

குறிப்பு:— இம் மருந்து இதே பெயருடன் சக்ரதத்தம் காஸ சிகித்சையில் சொல்லப்பட்டுள்ளது. சக்ரதத்தத்தில் யவக்ஷாரம் சொல்லப்படவில்லை தவிர கண்டங்கத்திரி பஞ்சாங்கத்தைப் பச்சையாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சக்ரதத்தம் கூறுகிறது

சுலோகம் 43 கண்டகாரீ லேகியம்

கண்டங்கத்திரி பஞ்சாங்கம் நாநூறு தோலா எடுத்து இடித்து நொறுக்கி ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி நூற்றி இருபத்தெட்டு படி விட்டு அடுப்பேற்றி எட்டுபடியாக வற்றவைத்து வடிகட்டி அந்த கஷாயத்தில் சர்க்கரை தோலா எண்பது சேர்த்து பாகு வைத்து அதில் நெய் சின்னப்படி ஒன்று சேர்த்து தேசாவரம், சீந்தில், கொடிவேலிவேர் பட்டை, சிறு [illegible]ரி வேர், அரத்தை, சுக்கு, திப்பிலி, மிளகு, கோரைக் [illegible], கடுக்காய் பூ, சிறுதேக்கு, வகைக்கு தோலா இரண்டு இடித்துப் பொடி செய்து போட்டுக்கிளரி ஆறின பிறகு அதில் [illegible]ங்கிலுப்பு, திப்பிலி, வகைக்கு தோலா முப்பத்திரண்டு இடித்துப் பொடிசெய்து போட்டு தேன் முப்பத்திரண்டு தோலா சேர்த்து கலந்து வேளைக்கு ஒரு தோலா சாப்பிட்டு வர தொண்டை நோய், குஷ்டம், விக்கல், காஸம் சுவாஸம் முதலியன சமிக்கும்.

குறிப்பு:— இது பிரசித்தமான மருந்து. அஷ்டாங்க ஹிருதயத்தில் காஸ பிரகரணத்தில் சொல்லப்பட்டுள்ளது. சர்க்கரை எடையில் மாத்திரம் பேதம் காணப்படுகிறது. அஷ்டாங்க ஹிருதயத்தில் சர்க்கரை தோலா நூற்றி அறுபது எனக் கூறப் பட்டுள்ளது. சார்ங்கதரத்தில் சொல்லப்படும் கண்டகாரி லேகியம் முற்றிலும் வேறுபட்டது.

சுலோகம் 44 குடஜாஷ்டக லேகியம்

வெப்பாலைப்பட்டை பச்சையாக தோலா நானூறு எடுத்து நன்றாக இடித்து பானையில்போட்டு ஜலம் சின்னப்படி

முப்பத்திரண்டுவிட்டு நான்கு படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தை மறுபடியும் அடுப்பேற்றி எரித்து பாகு போன்ற பதத்தில் பாடைக்கிழங்கு, இலவம் பிசின், காட்டாத்திப் பூ, கோரைக் கிழங்கு, அதிவிடயம், தொட்டால் சுருங்கி, வில்வப் பிஞ்சு, வகைக்கு தோலா நான்கு இடித்துப் பொடிசெய்து போட்டுக் கலந்து வேளைக்கு ஒரு தோலா சுடுநீர், பசும்பால், ஆட்டுப்பால், கஞ்சி, இவைகளில் ஏதாவதொன்று அனுபானத்தில் சாப்பிட மாதவிடாய்களில் அதிக ரக்தப்போக்கு, ரக்த பித்தம், ரக்த மூலம், அதிசாரம், முதலியன போம்.

குறிப்பு :— இது மிகப் பிரசித்தமான மருந்து. எல்லா நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது. அக்நிமந்தத்தில் குளிர்ந்த நீரிலும், மூத்திராசயக் கோளாறுகளில் அன்னம் வடித்த கஞ்சியினுலும், ரத்தப்போக்கில் ஆட்டுப் பாலிலும் சாப்பிடவேணு மென்று சிவதாஸஸேநர் கூறுகிறுர். கஷாயத்தை நான்கில் ஒன்ருக வற்றவைக்க வேண்டுமென்பது அதாவது எட்டுபடியாக வற்றவைக்க வேண்டுமென்பது சிவதாஸஸேநர் அபிப்பிராயம். அஷ்டாங்க ஹிருதயத்தில் வேறு இரண்டு குடஜலேகியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிலும் எட்டில் ஒன்ருக வற்ற வைக்க வேண்டுமென்ற போபதேவ மதமே சொல்லப்பட்டிருக் கிறது. நான்கில் ஒன்ருக வற்றவைக்கவேண்டுமென்ற சிவதாஸ ஸேநமதம் சார்ங்கதரத்தில் குடஜாஷ்டகத்தில் சொல்லப் பட்டுள்ளது.

சுலோகம் 45—காபத்ரீ லேஹம்

கருங்காலி வைரம், கருவேலம்பட்டை, லோத்திபட் ப்ரபௌண்டரீகம் ஜாதிக்கொடி, நாவல்பட்டை, தொட்ட சுருங்கி, ஆடாதோடைவேர், கடுக்காய், தான்றிக்காய், நெல் வற்றல், அதிமதுரம், மரமஞ்சள், ஆக மொத்தம் பதின் மூன்று சரக்குகள். இவற்றுள் ஏதாவது ஒன்று எடுத்து அடியில் கண்டபடி லேகியம் செய்துகொள்ளவேண்டும். லேகியம் செய்யும் முறையாவது :— முன் சொன்ன சரக்குகள் பதின்மூன்றில் ஒரு சரக்கை இருநூறு தோலா எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி முப்பத்திரண்டு விட்டு அடுப்பேற்றி எட்டு படியாக வற்றவைத்து வடிகட்டி அதை மறுபடியும் ஓர் பானையில் போட்டு அதில் கருங்காலி, நிலவேம்பு, மரமஞ்சள், கருவேலம்பட்டை, ஆகிய இவை வகைக்கு தோலா நான்கு இடித்துப்போட்டு பறுபடியும் அடுப்பேற்றி சின்னப்படி இரண் டாக வற்றவைத்து வடிகட்டி அந்த கஷாயத்தை ஓர் இரும்பு பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி முப்பத்திரண்டு தோலா பூங்காவி பொடிசெய்து சேர்த்துக் கிளரி கொஞ்சம் தேன் விட்டு கலந்து

கால் தோலா சாப்பிட முக ரோகங்கள் போம். இவ்விதம் இந்த சுலோகத்தில் பதின் மூன்று லேகியங்கள் சொல்லப்பட்டுள்ளன.

குறிப்பு :— இந்த சுலோகத்தில் பதின் மூன்று முறைகள் காணப்படுகின்றன. வேறு நூல்களில் எங்கும் இந்த முறைகள் காணப்படவில்லை. அஷ்டாங்க ஹிருதயம் முகரோக சிகிச்சையில் அடியில் கண்ட இரண்டு சுலோகங்கள் காணப்படுகின்றன. அதாவது "ஸ்வரஸ: க்வதிதோ தார்வ்யா: கநீபூத: ஸசைரிக: | ஆஸ்யஸ்த: ஸமது: வக்த்ர பாக நாடீ வ்ரணுபஹ: || படோல நிம்ப யஷ்ட்யாஹ்வ வாஸா ஜாத்யரி மேதஸாம் | கதிரஸ்ய வராயாச்ச ப்ருதகேவம் ப்ரகல்பயேத் ||" இதன் பொருள் :— மரமஞ்சளை இடித்து கஷாயம் செய்து அதாவது நான்கு தோலா மரமஞ்சளை இடித்து சின்னப்படி அரை ஜலம் விட்டு நான்கில் ஒன்ருக அதாவது அரைக்கால் படியாக வற்றவைத்து வடிகட்டி அந்த கஷாயத்தை மறுபடியும் அடுப்பேற்றி அதில் இரண்டு தோலா பூங்காவிப் பொடிசேர்த்து கிளரி கொஞ்சம் தேன் சேர்த்து அதில் கால் தோலா வாயில் அடக்கிக்கொண்டு உமிழ் நீரை உள்ளுக்கு விழுங்க வக்த்ரபாகம் என்ற முக வேக்காடு, நாடீ என்ற வாய்க்குள் உண்டாகும் புண் வாய்ப்புண்கள். ஆகிய இவை போம். மரபஞ்சள் போலவே பேய்ப்புடல், வேப்பம் பட்டை, அதிமதுரம், ஆடாதோடை, ஜாதிச்செடி, (பிச்சிப்பூ என்று மதுரையில் சொல்லுவார்கள்) கருவேலம்பட்டை, கருங் [illegible]லி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், ஆகிய சரக்கு [illegible]லும் தனித்தனியே தயாரித்து உபயோகிக்க முன் குண [illegible]ம். இந்த வசனங்களில் பதினெறு வித லேகியங்கள் [illegible]றன. இவற்றுள் பேய்ப்புடல், வேப்பம்பட்டை ஆக [illegible]ண்டு சரக்குகள் போபதேவரில காணப்படவில்லை மற்ற [illegible]பது சரக்குகள் போபதேவரால் சொல்லப்பட்டுள்ளன. [illegible]தேவர் சொன்ன பதின் மூன்றில் லோத்திப்பட்டை, [illegible]ண்டரீகம், நாவல்பட்டை, தொட்டால்சுருங்கி, ஆக இந்த [illegible]கும் அஷ்டாங்க ஹிருதயத்தில் காணப்படவில்லை. அஷ் டாங்க ஹிருதயத்தில் சொல்லியுள்ள முறையை நாம் அநுபவத் தில் பார்த்திருக்கிறோம் வாய்ப்புண்கள், அதிசாரம், பெரும் பாடு. ரத்தக்கடுப்பு. இவைகளில் நன்மை செய்கின்றது இம் முறைகளை லேகிய பிரகாணத்தில் சொன்னது பொருந்துமா என்பதை வாசகர்களே கவனிக்கவேண்டும்.

சுலோகம் 46 — கல்யாணக லேகியம்.

நெல்லிக்காய்ச்சார் சின்னப்படி மூன்றில் வெல்லம் தோலா இருநூறு சேர்த்து அடுப்பேற்றி பாகுவைத்து அதில் கருவாப் பட்டை, பச்சிலை, ஏலம், வாய்விளங்கம், கடுக்காய்த்தோல். தான் றிக்காய்த்தோல், நெல்லி வற்றல், மல்லிவிதை, கொடுவேலிவேர்

காய்களின் சத்து குறையாமல் லேகியத்தில் இருக்குமென்பது நூல்களின் தாத்பர்யம். வற்றலேயே உபயோகிக்கும் வைத்யர்கள் அந்த வற்றலையும் கஷாயத்துடன் சேர்த்து கஷாயம் வைக்க வேண்டுமென்று நினைப்பதில் அர்த்தமில்லை. வற்றலை இடித்துப் பொடிசெய்து பாகில் அப்படியே சேர்ப்பதுதான் உசிதம். அதை கஷாய சாமானுடன் சேர்த்து கஷாயம் செய்வதும், எண்ணை நெய்யில் வதக்குவதும் வெட்டிக்காரியங்கள் இனி அக்ஷ லேகியம் — வைத்ய ஜீவனம் என்ற நூலிலிருந்து இந்முறை யோக ரத்நாகரத்தில் காஸ சிகித்சையில் சொல்லப்பட்டுள்ளது. சின்னப்படி ஆறேகால்படி வெள்ளாட்டு மூத்திரத்தில் நானூறு தோலா எடையுள்ள தான்றிக்காய்த்தோல் பொடியைச்சேர்த்து அடுப்பேற்றி வேகவைத்து ஆறின பிறகு கொஞ்சம் தேன் சேர்த்து ஒரு தோலா எடையாக மாத்திரை உருட்டி நிழலில் காயவைத்துக்கொள்ளவும். இது உபயோகித்தால் மல மிளகிப் போகும்

சுலோகம் 49— பஞ்சஜீரக லேகியம்

ஜீரகம், மல்லிவிதை, சதகுப்பை, வெந்தயம், ஓமம், ஹபுஷா திப்பிலி, தேசாவரம், செவ்வியம், கொடுவேலி வேர்பட்டை, கடுகு, காட்டு ஓமம், வாய்விளங்கம், இலந்தைவிதை நாழல், கடுக்காய்த்தோல், ஹிங்குபத்ரீ, வகைக்கு த்தோலா நான்கு தாமரைக் கிழங்கு, சுக்கு, கருஞ்சீரகம், வகைக்குத் தோலா பதினு... இடித்துப்பொடிசெய்து ஓர் பாத்திரத்தில் வெல்லம் தோலா நூறுபோட்டு பசும்பால் சின்னப்படி நான்கு விட்டு பா...கு பதத்தில் பொடியைப்போட்டுக் கிளரி நெய் சின்னப்ப... விட்டு கலந்து தோலா ஒன்று வேளைக்குச் சாப்பிட ஸ்... டைய நோய்கள், பிரசவ காலத்தில்காணும் ரோகங்கள் ... தும் போம்

குறிப்பு:— இம்மருந்தில் ஜீரகம், கருஞ்சீரகம், ...ன்று சேர்ந்து மொத்தம் பலம் ஐந்து ஆகலால் இதற்குப் பஞ்...யில் லேகியம் எனப் பெயர்வந்ததாக சிவதாஸஸேநர் கூறுகிறார் ச... தத்தம், யோகரத்நாகரம் இவைகளில் இந்தப் பெயருள்ள மருந்தில் சரக்குகள் பேதப்படுகின்றன.

லேகிய அதிகாரம் முற்றிற்று.

போபதேவ சத...த்தில் லேகிய அதிகாரமும் ஷை உரையான ஹிருதயப்ரபோத...தில் லேகிய அதிகார உரையும் முற்றிற்று.

மதராஸ் ப்ரொவின்ஷியல் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,
X 185, அடையாறு. மதராஸ்.
பிரஸிடெண்ட்: வைத்யரத்... கப்டன் **G. ஸ்ரீநிவாஸமூர்த்தி,**
பி.ஏ. பி.எல். எம்.பி.ஸி.எம்.

அறிக்கை.

1 ஆயுர்வேத, சித்த, யூனனி தேசீய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல் பார்வையுடனும் தயார் செய்து தேசீய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ப்ரொவின்ஷியல் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும், மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. தேசீய இந்திய டாக்டர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மேற்கண்ட சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3. ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேச கட்டணம் பங்கு 1-க்கு 4 அணு கட்டவேணும். ஒரு மெம்பர் 1000 பங்கு வரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4. மேல்கண்ட சொஸைடியில் நடந்த 3 வருஷத்தில் ...ிதவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

		1945-46	1946-47	1947-48
	மெம்பர்கள் (தேசீய டாக்டர்கள்)	261	364	442
	பங்குத் தொகை	12,985	14,135	16,160
	மருந்து விற்பனை	68,589	1,15,683	1,38,348
4.	லாபம்	6,000	15,085	40,522
5.	பங்குக்கு வட்டி (பைலாவில் ஏற்பட்டபடி)	5%	5%	5%
6.	மருந்து வாங்கியதின் பேரில் லாபம்	1 ரூபாய்க்கு 1 பை வீதம்.	1 ரூபாய்க்கு 4 பை வீதம்.	1 ரூபாய்க்கு 6 பை வீதம்.

5. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வை. கோண்டல் ராவ்,
காரியதரிசி.

V.P.A

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா

அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினல் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்.

“ சக்தி ஸஞ்சீவி ”

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வாராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்!

தயாரிப்பவர் :—

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர். S. I. Ry.

Published by Pandit P. S. Rania Sarma for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Vadivel Press, Karur.